**JESUS CHRIST LIVING WORD CHURCH**
**Schoolpad 55, 6045AL Roermond, NETHERLAND**

## Worshipping Details

Sunday Service : 11:00 am to 13:30 pm
Every First Sunday : Communion Service
Every last Saturday: Fasting Prayer


## Contact Addressing

**God's Servant**
Pr .Jullian. D. Joseph
0049 176 2297 5208 / 0049 2434 9275 47
E-mail: jdjoseph1966@gmail.com

Evg. Roshan Arasakon

0031 61 94 525 73 / 0031 475 350 132

JesusChrist.l.w.c@hotmail.com
www.jesuschristlivingword-church.com
jclw church



" ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார்." *(ரோமர் 8: 26)*

(ஜெப தேவை உள்ளவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.)

# இயேசு கிறிஸ்துவின்
# ஜீவ வார்த்தை மடல்

பங்குனி மாதம் - **March. 2024**



## " ஞானநன்மை "

**"பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது. "**
(1கொரிந்தியர் 10:26)

" 'De aarde en al haar rijkdom zijn van de Here."
**(1Kor 10:26)**

*Zegen de land en de stad volgens dit woord.*
*In de naam van Jezus Christus. Amen*

இந்த வார்த்தையின்படி எம் தேசத்தையும் எம் நகரத்தையும் எம் குடும்பத்தையும் ஆசீர்வதியும், இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஆமேன்.

## தேவனுக்கே மகிமை

ஜீவ வார்த்தை – பங்குனி மாத மடல் 2024

### " ஞானநன்மை "

அன்பார்ந்தவர்களே,

இந்த உலகமும் இந்த உலகத்தில் உள்ள அனைத்தும் திருப்தி என்ற வார்த்தையை நிராகரிக்கின்றது. முன்னேற வேண்டும் என்ற விருப்பத்தைத் தாண்டி, முதலுக்கே மோசம் வரக்கூடிய அதிதீவிர வளர்ச்சியில் நாம் விரும்பியும் கட்டாயத்தாலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஒரு நிமிடம் கூட நின்று நிதானிக்க முடியாத அவலநிலை இன்று. நாம் ஓடும் ஓட்டம் நன்மைக்கு அல்ல தீமைக்கே வழி வகுக்கின்றது என்ற விழிர்ப்புணர்வு பகீர்வே இந்த மாத ஜீவ மடல்.

ஒவ்வொரு மனிதனின் முதல்(மூலதனம்) என்பது, அவனது நேரம், ஆற்றல், சிந்தனை, ஆரோக்கியம் என்பதை அறியாதவர்களாக வாழ்ந்து வருகின்றோம். இவைகளைக் கொடுத்து நாம் பெற விரும்புவது என்ன? பொருளாதாரம் அல்லது பணம் எனக்கூறலாம். கல்வி கற்பதே உழைப்பதற்கு என்று கூறும் புதியதலைமுறையினர், ஆரோக்கியத்தை விட வேலை முக்கியம் என்று வாழும் எம்மவர்கள். எதை இழந்து எதைப் பெறுகின்றோம்? நாம் ஓடும் ஓட்டம் வெற்றியை நோக்கியா அல்லது தோல்வியை நோக்கியா? என்ற சந்தேகம் வந்துவிடுகின்றது.

தேவனால் மகத்துவமாக படைக்கப்பட்ட படைப்பு இந்த மனிதனே. படைத்தவரின் நோக்கத்தையே மாற்றிவிட்டான் மனிதன். தேவன் படைத்த அனைத்துப் படைப்பும் தன் தன் கடமைகளை ஒழுங்காக செய்து வருகின்றது, மனிதனைத் தவிர.

"நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா?" *(1கொரி 9:11)* என வேதம் இன்று எங்களைப் பார்த்துக் கேட்கின்றது.

ஆம் அன்புறவுகளே, ஞானநன்மைகளை பெரிதாக கருதாமல் அற்ப சரீரநன்மைகளை நாம் தேடி ஓடிட்க்கொண்டிருக்கின்றோமே. இந்த ஞானம் எங்களை இந்த உலகத்தில் மாத்திரமல்ல, பரலோகத்திலும் எமக்கு நன்மை விளைவிக்கின்றதாய் இருக்கின்றது. உண்மையான வெற்றியும் சந்தோஷமும் இதில் தான் உள்ளது.

"பந்தய சாலையில் ஓடுகிறவர்களெல்லாரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? **நீங்கள் பெற்றுக்கொள்ளத் தக்கதாக ஓடுங்கள்**." *(1கொரி 9:24)* வாழ்வில் போட்டி என்று வந்துவிட்டால், நாம் வெற்றியையே பெற விரும்புகின்றோம். அதேபோல் கிறிஸ்தவ வாழ்விலும் நாம் வெற்றியை பெற்றுக் கொள்ளத்தக்கதாக எம் ஓட்டம் அமையவேண்டும்.

ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாக ஓடேன்; ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். என தேவ மனிதன் பவுல் கூறியது, இன்று உங்கள் இருதயத்திலும் ஒலிக்கட்டும். நாம் வாழும் வாழ்வு வீண்விரையமாக போகதபடி விழிப்படைவோம்.

ஒரு புறம் அற்ப நன்மைகளுக்காக ஓடும் நாம், மறு புறம் கவலை, கண்ணீர் என கரைந்தும் விடுகின்றோம். சகலதையும் உருவாக்கியவரின் நம்பிக்கை வைக்க மறந்துவிடுகின்றோம்.

" மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல், வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத்தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்."

*(1 கொரி 10:13)*

ஆம் நண்பர்களே, எம் சூழ்நிலை எம் அடுத்த கட்டத்திற்கு நகர முடியாத படி எம்மை கைதியாக மாற்றி விடும். யாருக்குமே எம்மைப் போல இப்படி நடக்கக்கூடாது என எம்மை கழிவிரக்கத்திற்கு அழைத்துச் சென்றுவிடும். இந்த உலகத்திலேயே நான் தான் கஸ்டப்படுபவர் எனவும் சித்தரித்து விடும், இது தவறான கருத்து, இந்த சிந்தை இருந்தால் இன்றே அதை தகர்த்தெறிந்து விடுங்கள். தப்பிக்க வழி தேடுபவருக்கு தேவனே வழியும் ஒளியுமாய் இருக்கிறார்.

எம் சுய ஓட்டத்தை சற்று நிறுத்தி நிதானித்து உண்மையான ஞானநன்மைக்காகவும் கழிவிரக்கம் அற்ற வாழ்விற்காகவும் ஓடக்கடவோம். வாழ்வோம் இன்மைக்கும் மறுமைக்கும் பயனுள்ள மகத்துவமான வாழக்கையாக..

### ஜெபம்

**அன்பின் பரம தந்தையே, மகத்துவமாக படைக்கப்பட்ட நான், ஞானமற்ற வாழ்க்கை வாழ்ந்த தருணங்களை நினைத்து, மன்னிப்பு வேண்டி நிற்கின்றேன். வெறும் சரீரமாக என்னை நீர் படைக்கவில்லை, என்னில் உமது ஆத்துமாவையும் சேர்த்தல்லவா படைத்தீர், இதை உணராது வெறும் சரீர நன்மைகளை தேடிய என்னை மன்னித்து, என்ன சோதனை வந்தாலும் நீர் தந்த பெலனுடன் பரலோக ராஜ்சியத்தை தேட வரம் தாரும். நேரத்தை உமக்காக பிரித்து, உம்முடன் வாழ வரம் தர வேண்டும் என்று இயேசுவே உம் நாமத்தினால் ஜெபம் கேட்கிறேன். ஆமேன்.**